களைப் புணர விடுத்துப் பலமும் பிரயோஜனமுமுள்ள மிருகங்களை உற்பத்திசெய்யும் சாஸ்திரிகள் மட்டாயிருக்கிற ஒரு ஜதைக்குதிரைகளில் பெண்குதிரைக்குத் துணியினுல் கண்ணைக்கட்டி ஆண்மட்டக்குதிரையைச் சையோகஞ்செய்ய விடுத்து அது விந்து கழிந்தவுடன் மற்றொரு பெரிய குதிரையைக் கொண்டுவந்து எதிரில் நிறுத்திப் பெண்குதிரையின் கண்ணிற்கட்டிய துணியை நீக்குங்கால் பெண்குதிரையானது கண்ணினுல் பெரிய குதிரையைக் களிப்புடன் பார்த்துத் தேகஞ்சிலிர்ப்பதினுல் குதிரையென்னும் பிண்டோற்பத்திக்கு (சரீர உற்பத்திக்குப்) பெண்குதிரையின் கருக்குழியில் அமைந்த மட்டக்குதிரையின் விந்துவே முதற்காரணமாய் நிற்கப் பெண்குதிரையின் மனதென்னும அரசனுடைய அரசாட்சிக்கு உட்பட்ட கண்ணென்னும் இந்திரியத்தாற் பார்த்து மனதாற்கவரப்பட்ட ஆண்குதிரையின் ஸ்வரூபமே பெண்குதிரையின் கருக்குழியிலமைந்திருக்கும் மட்ட ஆண்குதிரையின் விந்துவிற்பிரதிபிம்பித்து அதனுலேயே பெரிய குதிரையாக விகாரப்படுகிறது. கண்ணென்னும் புலனுலே பார்த்துப் பெரிய ஆண்குதிரையின் உருவத்தை மனதாலகவர்ந்ததினுலே இவ்விகாரமுண்டாகுமேல் பின்னும் வேறு வேறு உருவங்களைக்கவர்வதனுலே அதற்கேற்றபடி யாகுமென்பதற்குச் சந்தேகமுமுண்டோ?

நண்பர்களே! இதுவரையில் நாம் சர உயிர்களிலொன்றுகிய குதிரையின் விஷயத்தை மானுஷீக உற்பவ விகாரத்திற்கு உவமானமாக எடுத்துக்கூறினேம். நம்முன்னிருக்கும் விஷயம் மானுஷிகமேயாகையால் அதைப் பின்பற்றிச் சுருக்கி முடிப்பாம். ஆத்திகர் பாபத்தால் இச்சம்பவம்நேரிடுமென்பார்களாயின் அது உண்மையே. பாபச்செய்கைகளினுல் மனம் அசுத்தமாகின்றது. (சரீர சுத்தியினுல் மனச்சுத்தியும் மனச்சுத்தியினுல் ஆன்மசுத்தியுமுண்டாகுமாதலால் சரீர அசுத்தியினுல் மன அசுத்தியினுல் ஆன்மஅசுத்தியுமுண்டாகிறது)——ஆனுல் ஒரு மனிதனுடையபரமபுண்ணியங்களுக்கேற்பப்பிண்டமுமுற்பத்தியாவதும் சிலகாலத்திற்கு முந்திச் செய்த தீயநற் கர்மங்கள் அவ்வித கர்மம் யாதுஞ்செய்யாத விந்து கழியுங்காலத்து எப்படி அவ்விந்துவில்வந்து அமையுமெனின், கூறுவாம். எவ்வாறு சிலகாலத்திற்கு முந்தி உண்டு குடித்த அன்னபானுதிகள் சரீரத்திலேறி இரத்தமாகிச் சரீரத்தின் அங்கங்களைப் போஷித்து மனதானது காம லீலையை விரும்பிச் சஞ்சலப்படுங்கால் பாபங்களையோ புண்ணியங்களையோ செய்த சரீரத்தின் எல்லா அங்கங்களின் சாரமாக(சத்தாக) இறங்கும் விந்து பெருமையாகிய மனிதனுடைய எல்லா உறுப்புகளையும் சிறுமையாக அடக்கிக்கொண்டிருக்கும். ஒருக்கால் கடமாகிய சரீரம் பகுத்தறியுந்தன்மை இலதாயினும் மனமானது பூர்வம் செய்தொழிந்த பழக்கத்தை இச்சரீரத்திற்கு ஊட்டி அவ்வழியாகவும் அதன் சாரமாகவும் உண்டாகும் விந்திற்குச் செய்தொழிலுக்கேற்கப் புண்ணியபாபங்களின் சூக்ஷாம்சங்களை அதில் நாட்டுகின்றது. இதனுலே உடன்பாடாவது யாதெனில், சரீரம் அசுத்தமாக மனமும அசுத்தமாகும். மனது அசுத்தமாகச் சரீரமும் அசுத்தமானதே. மனத்தின்கண்ணே மூந்து ஓங்கும் (ஈஷணங்களாகிய) ஆசைகளாகிய பெண், பொன், மண் ஆகியவைகளை அனுபவிக்க அவாவும் முயற்சியினுற் செய்யவேண்டிவருகிற அமானுஷிக தர்மதொழில்களினுலேயே மனம் அசுத்திபெற்றுச் சரீரத்தையும் (ஆன்மாவையும்) அசுத்தமாக்குகிறதினுல் திரிகாலக்கியானிகளாயிருந்த நம் முன்னேரும பரோபகாரமாய்ப் பாரிலுள்ளோராகிய மக்கள் உய்த்துணர்ந்து உஜ்ஜீவிக்குமாறு தோற்றமற்ற பொருளென்றுசொல்லப்பட்ட மனதை ஒருவாறு இயன்று தன்வசப்படுத்தி இதுபோன்ற விபரீதங்களுக்கு வழியில்லாது பல இடையூறுகளினுல தொந்தப்பட்ட மக்களுக்கு விசேஷமாகிய பகுத்தறிவு இருப்பது துர்லபமாகையால் முமுட்சுக்களாகிய பெரியோர்கள் செய்தல், செய்வித்தல், உடன்படுதலாகியவைகளினுலும் அறிந்தும் அறியாமலுஞ்செய்தவை கூறினுலும் பெரிதுஞ்சிறிதுமாகியதும் நாம் அறிகிறதாயும் நம்மாலறிந்துகொள்ளாதனவாகியுமாகிய பாபங்களையும் நமது ஆன்ம இரட்சையாகிய இச்சரீர விவகாரத்திற்காக நடப்பதும் உட்கார்வதும அசைவதும ஆகிய இவைமுதலியவைகளால் பிற உயிர்களுககு உண்டாகும் துன்பங்களினுல் நேரிடும் பாபங்களையும் நசிக்கச்செய்ய வல்லதாகிய அமங்கள அவிலட்சண ஸ்வரூபங்களையும், அசுப சப்தமந்திரங்களையும் நீக்கி மங்களவிலட்சண திவ்விய ஸ்வரூபங்கள் சுபசப்த மந்திரங்கள்முதலியவைகளை நமக்கு ஒரு பேருதவியாகச் செய்துவைத்து அவ்வாறு நன்னெறியிலொழுகவேண்டியதென்று கட்டளையிட்டதை நாம் கலியின் தர்மத்திற்கேற்க மதியாது அசட்டைசெய்ததினுலும் சரீரத்திலுண்டாகிய பிணியைத் தீர்க்க ஔஷதமுண்டு சுகமடைதல்போல மனப்பிணிக்கும விகாரத்திற்கும் நியாயத்திற்கும் மானுஷிகதர்மத்திற்கும் ஒத்ததாயுமுள்ள பரிகாரமாகிய என்ன பரம ஔஷதமுண்ணலாமென்று சற்றும் சிந்திக்காது எல்லாவற்றையும் அனுபவரீதியாய்ப் பிரத்தியக்ஷமாய்க் கண்ட வல்லவர்களைப்போல் சொல்லித்திரியும் சில பேதைப்பதர்களின் வார்த்தைகளைக்கேட்டுச் சிலர் மயங்கியும், மற்றுஞ்சிலர் இம்மங்கள ஸ்வரூபங்களைக் கணப்பொழுதேனும் மனதிலெண்ணியே அறியாமல் அம்மனதைக்கத்தரிக்கோலின் தன்மைபோலப் பழக்கியிருக்கும் அம்மதி மந்தர்களின் பழக்கத்தினுலும் இவர்களுடைய வார்த்தைகளையே பரமகுருவின் வார்த்தையாக எண்ணி மகான்கள் இட்ட சட்டதிட்டங்களைமீறி வழிதப்பியதனுல் உண்டாகியபயனை பிரதிபலமே இது அல்லாமல் மற்றென்றல்லவென்று துணியவேண்டியதாயிற்று.

என். வி. ஆர். சுப்பராயலுநாயுடு, சென்னை.

Chidambaram.—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No. 76. Senkalooneer Pilliar koil Street.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

பத்திரகிரயம்.
1-வருஷம் 2 12 0
6-மீ 1 8 0
3-மீ 0 14 0
1-காபி 0 2 6
இலங்கைக்கு 3 8 0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திர கிரயத்தை பணியார்டராகவவாதல்லது ரூபா 1-க்கு அணு 1-சேர்த்துத்த பால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible]॥ [illegible]॥

௪ம புத்தகம்] சிதம்பரம்:— ௧௮௯௰ஆ ஜூலைமீ ௪௨ [இலக்கம்-௨௧

[illegible]

௧. [illegible]

௨. [illegible]

௩. [illegible]

௪. [illegible]

௫. [illegible]

௬. [illegible]

௭. [illegible]

[illegible]

பத்திரிகாவிதானங்கள்.

௧. பத்திரிகை வேண்டுவோர் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

௨. கடிதமுதலியவைகளும் மேற்படி மானேஜருக்கே அனுப்புதல்வேண்டும்.

௩. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் நல்லமை கொண்டு சுத்த ரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெரு.

௪. கையொப்பக்காரர்கள் ஊர் பெயர் முதலியவற்றை நன்ருக எழுதியனுப்புதல்வேண்டும். வேறு ஊர்களுக்குப் போகநேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல் வேண்டும்.

௫. இன்னும் இதைப்பற்றி விவரம் அறிய வேண்டுவோர் அரையணு லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித் தெரிந்துகொள்ளலாம்.

௬. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினுலாவது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாப்சுசெய்யப்படா.

௭. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப் பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியாப்ரெஸ், சிதம்பரம்

[illegible]

யாது. என்னையெனின், புராணங்களிற்கண்ட சித்தாந்தக்கொள்கைகளுக்கும், ப்ரம்மசூத்திரத்தின் கொள்கைகளுக்கும வேற்றுமை சிறிதுமில்லை. ஆயின், இவ்விரு நூல்களுக்கும் வேற்றுமைதான் யாதெனில், புராணங்கள் விரிவுடையன; பிரமசூத்திரங்கள் குறுகிய திருமேனியையுடையன; புராணங்களுக்குரை வேண்டுவதில்லை; பிரமசூத்திரங்களுக்கோ உரைகளின்றியமையாது; புராணங்களிற் கன்மயோகங்கள் முதலிய மற்றவைகளையுங்கூட்டி யுபதேசிக்கப்படும். இனி இவர் கூறியவாறு ஒப்பின், ஆசிரியர் வாதராயணர் பெருமோசக்காரராய் முடிவர்; அன்றியும் அதிகரண விலக்கணத்தில் ஐயமென்பதோர் அங்கமாதலின், ஐயந்திரிபற அவர் பொருளை விளக்குந்தன்மைபெற்ற எவ்வாக்கியங்களும அவைகளுக்கு விஷயங்களாகாததுண்மை. அங்ஙனம் ஐயந்திரிபின்றி உண்மைப்பொருளை விளக்கு முபநிடதங்களும் பிரசூத்திரங்களின் விஷயமாயுள்ள வாக்கியங்களின் வடிவையேபெற்ற மற்றைய வுபநிடதங்களும், வேறு விசாரிக்க விடந்தராவாதலின், அவைகளை எடுத்து ஆசிரியர் விஷயமாக்காமையின், அவைகள் அப்பிரமாணமாயொழியுமென நமது சாஸ்திரியார் எக்காரணம்பற்றிச் சாற்றினரோ அது எமக்குப் புலப்பட்டிலது. அறிஞர்காள்! சிறிது செவிசாய்மின்! கன்மகாண்டத்தின் பெருமையை விளக்கவந்த ஸ்ரீமத்ஆசிரியா ஜைமினிமுனிவர் ஆயிரம் அதிகரணங்களுடன கூடிய பூர்வமீமாஞ்சை என்னுமோர் பெருநூலை இயற்றியருளினர். அவர் தமது அதிகரணங்களுக்கு விஷயவாக்கியமாய் எடுக்காத பல வசனங்களமைந்த கன்மகாண்டப்பகுதிகள் அப்பிரமாணமென ஓர் கன்மகாண்டி ஒப்புவானேல், அவன் கன்மங்களை முற்றிலும் நிறைவேற்ற ஆற்றலுள்ளவனுவனோ? இனி அவ்வாசிரியர் மதத்தில் கன்மகாண்டங்களுள் சில வாக்கியம் அப்பிரமாணமெனக் கூறிடில், அதை ஆரியர் ஒப்புவரோ? ஆராயின் ஐயன்மீர்! இதுவோர் போக்கேயன்றி முடிந்த கொள்கையல்ல. மேலும், புராணங்களை இயற்றின வியாசர் வேறு, பாரதமியற்றியவர் மற்றொருவர். பிரமமீமாஞ்சையைச் செய்தருளியவர் மற்றொருவர் என்று இவர் கூறினும் வேதாந்தசாஸ்திர கர்த்தாவாகிய வியாசர் மதத்தில் இவை அப்பிரமாணமும் மற்றவர் மதத்தில் பிரமாணமுமாதலால், பற்பல வியாசர்களொப்பியவழியே எல்லோரும் ஒப்பவேண்டிவரும். ஆதலின் அறிஞர்காள்! ஆரியர் ஜைமினிமுதலிய அரிய மாணுக்கரைப்பெற்று லோகோபகாரமாய் வேதங்களை வெளியிட்டுப் புராணங்களை வகுத்தருளி யோகபாஷ்யம், பிரமசூத்திரம், சிக்ஷை தர்மசாஸ்திரமுதலிய [illegible]ல்களை இயற்றிய வியாசர் ஒருவரோ என[illegible] இனியேனும் நமது சாஸ்திரிகளறிந்து [illegible] களைப்போல் விதண்டாவாதத்தை [illegible] வேறு இவர் வேறெனத்தோன்றியவ[illegible] நிடதங்களையும் படித்து அவற்றினுள் அறிய விரும் நமது சாஸ்திரியார் உள்ளந்தெளிவ[illegible]ரிப்பை கார்டாவ [illegible]கொள்ளலாம்.

[illegible]-தஞ்சா [illegible], 35-எல்லம [illegible]ல்லூர், 37-

[illegible]

ப்ரம்மவித்தியா.

[illegible]

சிதம்பரம்:—விரோதி-ஹு புரட்டாசி-மீ கரு-உ சோமவாரம்

[illegible]

கன்மம்.

தொடர்பு.

—(*)—

பிறகு ஓர் கேள்வி வெளியாகின்றது. அதாவது "ஒவ்வோர் தேசங்களில் அது ஒவ்வோர்விதமாய் நிற்றல் யாதுகாரணம் பற்றி? என்பது. இதன் கருத்து யாதெனில், இவ்வித விபவஸ்தை காலத்தால் மாறுதாயின் இடங்கள் வேற்றுமைப்பட்டமையால் இவை எங்ஙனம் மாறின. பாருங்கள்! யாம் கண்டமட்டில் ஒவ்வோர் தருமம் ஒவ்வோர் தேசங்களுக்கு ஒவ்வோர்விதமாகக் காரணப்படுகிறது. வடநாடுகளிலுள்ளவர் கொண்ட குடிமுதலிய தருமங்கள் தென்னாட்டவர்களால அதருமமெனக் குற்றங்கூறப்படுகின்றது. தென்னாட்டவர்கொண்டபடி பழையசோற்றைத்தின்பதுமுதலிய சில தருமங்கள் வடநாட்டவர்களனஞ்செய்ய விடந்தருகின்றது. இனி இவ்விஷயத்திற் காலத்தால் வேறுபாட்டைப்பெறுத தேசத்தால்மட்டில் அக்கன்மம் வேறுபாட்டைப் பெறலாமென எடுத்து நிலைநாட்டவேண்டிய யுத்தி யொன்று கிடைப்பது மிகவரிது. பாருங்கள்! உலகத்தில் அநித்தியமான சரீரமுதலியவற்றில் இடவேற்றுமையால் (அதாவது மேற்றிசையார் வெண்ணிறத்தவர், நந்தேயத்தவர் கரியநிறத்தவர்) என்பதாதி வேற்றுமை தோற்றுகின்றதோ. அவ்விஷயங்களில் காலவேறுபாட்டானும் (அதாவது இளமை முதுமை முதலியனவானும்) வேற்றுமை தோற்றும். இனி இக்கன்மவிஷயத்திற் தேசவேற்றுமையால் வேற்றுமையைக் கண்கூடாகக் கண்டோமாதலால் அஃது காலத்தானும் மாறுமென்வே கொள்ளவேண்டும். இனி இவ்விதங்கூறல் அமையாதெனின், தகுந்த விடையளிக்கவேண்டும்" என்பதே. இதற்குச் சமாதானம். "உலகத்தில் எவ்விடம் தேசவேற்றுமையால் வேறுபாடு பிறக்குமோ அவ்விடங் காலவேற்றுமையால் வேற்றுமை உண்டாம்" எனவும், "எவ்விடம் காலவேற்றுமையால் வேற்றுமை பிறக்குமோ அங்கு இடவேற்றுமையால் வேற்றுமை பிறக்கும்" எனவும் கோடல் மூலயுக்தியற்றது. என்னையெனின், சீதம் உஷ்ணம் முதலியவை வேறுபாட்டால் உயரத்திலும் ஆழத்திலும் ரஸத்திற்கு வேற்றுமையுண்டாவதால் அதற்கு இடத்தால வேற்றுமையுண்டு. தனது வீட்டில் ப்ளேட்டில் ஒருவருக்கும் வைத்திருப்பதால் வேற்றுமையுண்டாகாமையால் அதற்குக் காலத்தால வேற்றுமையில்லை. அங்ஙனம் மாப்பிள்ளைமுதலிய பொருட்களில் காலஞ்சென்றால் வள்ளம் குறுகுந்தன்மை முதலிய வேறுபாடுகளைக் கண்டாலும் அதைத் தேசம்விட்டுத் தேசம் கடக்கினும் வேற்றுமையுண்டாகப் பார்ப்பதில்லை. மேலும், இவ்விதம் இடவேற்றுமையா கன்மம் வேறுபடுமெனக்கூறியது நல்ல காரணத்தை மூற்கொண்டே எவ்விதமெனில் "உலகத்தில் தேசங்கடோறும் சிதோஷ்ணங்

[illegible]

கள் வேற்றுமைகளைக் கணக்கர் கணக்கிட்டிருக்கிறார்கள். வாடர்முதலிய ஆசிரியர் அங்ஙனம் கூறிகிற்கின்றனர். ஆயின், யாம் முற்கூறியபடி வருங்கால நிலையை யறிந்து அதற்குத்தகுந்த தருமங்களை மனுமுதலிய மகரிஷிகள் எழுதியதுபோலவே அவ்வத்தேசங்களின் நிலையையுமறிந்து அதற்கெனத் தருமங்களை அவரே வேறுபடுத்தினர். இனி நீதி எக்காட்டிலு மொன்றுவதுபோலக் கன்மம் என்பதமையாது. அக்கன்மந்தேசத்தாலுங் காலத்தாலும் சாதிக்கத்தக்கதாதலால் அவைகளைப்பற்றிய வேற்றுமை அதிற்றோன்றும். அதுபற்றியே "தேசம், காலம், உபாயம்" என்று தொடங்கி யாஞ்ஞுவல்கியர் கன்மத்தைப்பிரித்தார். இச்செய்யுளையும் யாம் முன்னரோ விரித்தோம். ஆயின் தேசவேறுபாட்டால் இது வேறுபடுவதுசிதமே. உண்மையில் இடமும் காலமும் ஒன்றை ஒன்றுபற்றியே நிற்கும். எவ்விடத்தில் சீதம் உஷ்ணம் முதலியவை மாறிவரப் பார்க்கின்றோம். அவ்விடம் அவ்வேற்றுமை இடத்தால் நேர்ந்ததல்ல. மற்றுக் காலத்தாற்றான் அவ்வித வேற்றுமை காணப்படும். இனி அவ்விடத்துள்ள வணுக்கள் வெகுகாலப் பரிபாகத்தாற் கல் முதலிய தன்மைகளைப்பெற அவ்விடத்தில் சீதோஷண வேற்றுமைகள் தோன்றுகின்றன. இனிச் சிலதேசங்களிற் கல் மிகுதியால் அங்கு தேயு அதிகமெனச்சாற்றலும் கூடாது. என்னையெனின், ஆராயுங்கால் ஒருகாலம் மண்ணுப்நின்ற வணுக்களே இங்கு காலபாகத்தால் அத்தன்மையைப் பெற்றனவாகலினென்க. இனி அவ்வித பரிபாகத்திற்குக்காலமே காரணம். இனி இடமே முக்கியமெனக்கொண்டால் அதே சுழன்று வரவரப் பல வேற்றுமைகளைப் பெறும் சீதோஷணங்களைக்காக்குமெனலாம். ஆயின் காலம் வேண்டுவதில்லை. ஆகலின், இடமும் வேளையும் ஒரே தன்மைத்தாதலால் இவைகளுள் ஒன்றாய காலத்திற்கு நாம் சொல்லியபடி காலம் வேறுபடினும் அவ்வக்காலங்களுக்கென ஏற்பட்ட தருமங்களும் மாறும். தேசம் வேறுபடினும் அவ்வத்தேசங்களுக்குரிய தருமங்கள் ஆங்காங்கு மாறும். இனி இவ்வளவுமட்டில் அது அநித்தியத்தன்மையையாதல் கற்பிதத் தன்மையையாதல் உண்டாக்காது. இனி மறு விஷயத்தை விசாரிப்போம். "அக்கன்மத்தை இதே பரதகண்டத்திற்றானே செய்தாற்றான் பெருமை பெறுவாரென்பது யாதுபற்றி" என்பது அடுத்த விஷயம். இதன் கருத்து வருமாறு:—"ஐயா! கன்மம் கடவுளால் விடப்பட்ட கட்டளையாயின் அவர் அக்கன்மத்தை ஓரே தேசத்தவர்க்கா விதிப்பர். இக்கன்மமோ இத்தேசத்திற்றானே அனுட்டிக்கப்படுகிறது. ஆராயுங்கால் இவ்வித ஜனத்தொகை விருத்தியடையுங்காலும் இப்பரதகண்டத்துள்ள ஜனங்கள் 25 கோடியே. இவர்களுக்கும் இவ்வித கன்மத்தைக் கையாண்டுவரும் ஜனங்கள் தொகை 17கோடியே. இனி இச்சொற்ப ஜனங்களுக்கே கன்மம் உண்டென்றும், மற்றவர்க்கில்லையென்றும் சொல்லின், இவர்களைமட்டிலா கடவுள் படைத்தார். ஆயின் கன்மம் நித்தியமெனலும் கூடுமோ? ஆயின் இது இத்தேசத்திற் குடியேறிய ஆரியரெனப்படும் ஓர் சார்பினரால் தங்தேசத்தவர்க்கென வேற்படுத்திய ஒரு நிர்ப்பந்தமே என்பதிற்றடையாதுளது. மேலும் ஜீவர்களுக்கு அநாதி கன்மப்பிரவாகத்தாற்றான் மறுபிறப்பென நீ சொல்வாயாகில் அக்கன்மம் பரதகண்டத்தவர்க்கே உரியதெனின், மற்றவர் கன்மபாசம் நீங்கினவராவார். ஆயின் அவர்கள் மகாசுகிகள் எனவேண்டுமே. அங்ஙனமாயின் இக்கன்மபூமியாகிய பரதகண்டத்தை நீங்கி இதி

[illegible]

லுள்ள சொற்பதொகை ஜனங்கள்தவிர மற்றைய பெருந்தொகை ஜனங்கள் கன்மமற்றவராகலின், அவர்கள் மரித்தால் மறுபிறப்பற்ற மோக்ஷத்திற் சேரவும், மற்றவராகிய இத்தேசத்தவர் மறுபடி பிறக்கவும் நேருமே? மேலும், அவர்கள் சாமஜன்மிகளெனப் பெரும் புகழையும் பெறுதொழியார். அதை ஒப்பின் ஆரியரினும் தஸ்யுக்களும் மிலேச்சர்களும் பெரியோராவர். ஐயோ! மற்றவர் இங்ஙனம் மற்றைய தேசங்களிற் பிறந்தமையாற்றானே பிறப்பிறப்பிலாப்பெரும்பேறைப்பெற, இப்பரதகண்டத்திற்பிறந்த நம்மவர்மட்டில் பெருங்கன்மவலையிற் சிக்கி வருந்தப்படும் அரும்பாடுகட்குக் காரணம் யாதோ? இவர் செய்த முற்பவப்பாவமோ. ஆதலால் ஆராய்ச்சியில் மிகுந்தவர் கொள்கை யாதெனின், இக்கன்ம நிர்ப்பந்தம் மறுதேசங்களின் சொரூபமறியாத சாமானிய ஆரியரேற்படுத்திய சட்டே இது. இதற்குப்பயனும் விசேடமாய் ஒன்றுங்கிடையாது. பூமண்டலத்தில் ஏதோ சிலர்மட்டில் இதையனுட்டிப்பவரேயன்றி மற்றவர் அங்ஙனமிரார்" என்பதும் இப்பெரும் பூமண்டலம் எவ்வளவோவாயிருக்க இவ்விடத்திற்றானே கன்மபூமியெனில் இது சமீபக்கட்டுப்பாடெனல் ஒவ்வாது. நடுவுநிலையாய் உலகத்திலுள்ள உயிர்களை நடத்தும் ஸ்ரீபரமேசுரனுக்கு இப்பரதகண்டத்திலமட்டில் ஏதோவொரு அபிமானம அதிகமெனக்கூறுதலுமமையாதன்றோ? மேலும் இவ்வித மேன்மைதாங்கிய கன்மத்தை இச்சிறுதொகையாரன்றி மற்றவர் கைக்கொண்டு ஏன் சுகம்பெறலாகாது. அதனால் கடவுளுக்கு வரும் குறை யாது? அவர்தான் செய்த பாவமேது?" என்பதும் இதற்குச் சமாதானம். ஐயா! கன்மமென்பது இத்தேசம்மட்டில் ஏற்பட்டதற்குக் காரணம் முதலில் விசாரிக்கவேண்டியதவசியமே. அதிலுள்ள உண்மையிது. "ஆதியில் இப்பூமண்டலம் சிறிதுகாலம் மனிதரோ இல்லாதிருந்தது. பிறகு குடியேறின மனிதர் கடவுள் தமக்குக் கட்டளையிட்டபடி இவ்வாரியதேசத்தையடைந்தனர். அதே தேசத்தையடைந்து அங்கு மனுமுதலிய முனிவரையதிட்டித்து அக்கடவுளால் கட்டளையிடப்பட்ட கன்மநூலைக் கைக்கொண்டு வாழ்ந்தார்கள். பிறகு அவர் பெருகிக்கலைந்து பலவிடம் சென்று குடியேறினர். ஆகலின் அவ்வவ்விடங்களுக்கேற்ற நடையுடைகளைத் தரித்துக்கொண்டு இப்பரதகண்டவாசிகளுடன் வேறுபட்டனர். ஆயினும் முன் தாம் ஆரியதேசத்திலிருந்த சமயத்துள்ள கன்மங்களை அவ்விதமே ஏற்றம் தாழ்வின்றி அனுட்டிக்கத் தவறி ஏதோ அக்கன்மச் சாயலைக் கைப்பற்றினர்கள். ஆரியர்களோ தம்முன்னோரனுட்டித்துவந்த வழியைப்பின்பற்றி அவ்விதமே நடந்துவந்தனர். மேலும் இத்தேசம் விட்டொழிந்தவர் விசேஷமாய் ஆரியபாஷையின் பயிற்சியைப்பெற்றாரில்லையாகலின் அவர்களுக்குக் கீழ்த்திசையிலேனும் மேற்றிசையிலேனும் ஆரியபாஷையில் ஏற்பட்ட ஸ்மிருதிக் கிரந்தங்களை வெளியிட முடியாமற்போயிற்று. பிறகு அவரவர் புத்தியிற்றோன்றியபடி சில ஆசாரப்பேலிகளைக் கற்பித்துக்கொண்டனர். மேலும் இத்தேசத்தினின்று ஆசாரக்குறைவாற்றானே வெளியேற்றப்பட்டவர்க்கு மறுபடி அவ்வாசாரங்களைக் கைப்பற்றுதல் கூடாதென்றியவே அவர் இச்சைப்படி அவர் செய்யத்தொடங்கினர். இனி இத்தேசத்திற்றானே ஆதிகாலம் மனிதர் வசித்தார் என்பது இக்காலத்துப் பூமிசாஸ்திர (Geology) பண்டிதர்களும் அறிவார். எங்ஙனமெனின், உலகத்தில் ஜனங்களின பற்பல ஆசாரங்களும் அம்ஙனக செம்மகளும

[illegible] (Africa and America) [illegible] (America) [illegible]

ஒற்றுமைப்பட்டிருத்தலால் இவர் எல்லோரும் ஒரு குலத்தவராய் ஒருக்கால் இருக்கவேண்டும். ஆயின் இவர் முன்குடியிருந்தவிடம் யாதென ஆலோசிக்கில் அதற்கெனச் சோதித்தவிடம் இப்பாதகண்டமே அஃதென வெளியாகின்றது. இவ்விடத்தில் பூமியைச் சோதித்தால் மற்றையவிடங்களிலும் வெகு காலத்துக்கு முன்னரோ ஜனங்கள் குடியேறியிருந்த அடையாளங்கள் தெரிகின்றன. இனி மகரிஷிகள் எழுதிய புராணங்களும் ஆதிகாலத்தாசிரியர்கள் பிரமதேவனது கட்டளையால் கைமிசாரண்ணியத்தையே பெற்று வாழ்ந்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது. மகமதியர் கிறிஸ்தவர்கள் இவர்களும் ஆதிமனிதன் ஆசியாவிற்றான் பிறந்தான் என்கிறார்கள். ஆயின் எல்லோரும் ஒருமனதாய்ச் சிறிது முன்னும் பின்னுமாய் இவ்வாரிய தேசத்தைத்தானே குறிக்கிறார்கள். ஆயின் இதே ஆதியில் ஜனங்கள் குடியேறின தேசம். ஆதலாற்றான் இங்கு பரம்பரை வழுவாது கன்மம் நடந்துவருகிறது. இனி ஆலோசித்துப்பார்க்கில் முதலில் வந்த மனிதர் உலகம் விஸ்தாரமாயிருப்பினும் உள்ளத்தில் மிகவும் சிறந்த இடத்தையே தேடுவார்கள். அவ்விதமாராயின் பூமண்டலத்தில் இக்கண்டமே மிகச்சிறந்தது. எங்ஙனமெனில், இவ்விடத்தில் சகிக்கக்கூடாத சீதோஷ்ணங்களில்லை. தண்ணீர் வெள்ளத்தால் சமுத்திரத்தினிடம் பயமேயில்லை. அடிக்கடி கடல் கொண்டுபோம் என்பதுமில்லை, பெரும் மலைகளுள்ளனவாதலால் பூமிகம்பமில்லை. எரிமலைகளிருந்ததாகக்கதைகளிலும் கேட்டோமில்லை. தண்ணீரில்லாப் பாலைவனங்கள் மற்றைய தேசங்களில் மிகுந்திருப்பதுபோல் இங்கில்லை. வேண்டிய மலைகளும் காடுகளுமுள. எவ்விதப்பயிரும் வளரும் பூமிகள் பலவுள. உலோகங்கள் தாதுக்கள் உபதாதுக்கள் இரத்தினங்கள் இவைகளும் உண்டாகுமிடமுண்டு. நல்ல நற்கள் பலவுள. நதிகளே நற்சுவை பொருந்தியருந்தற்குரிய நீர் நிறைந்தன. இனி அமெரிக்கா முதலியவிடங்களில் நதிகள் வெகு விரிவாயிருப்பினும் அவைகள் எவ்வித உபயோகத்திற்கும் வராது. விசேஷமாய் உவர் நீர் நிறைந்தனவாயினும் அததேசத்தவர் ஆகாரமான மீன் முதலியவற்றைத்தரும். ஆகலால் குணங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்த இந்தத்தேசம்போல் வேறு எததேசமும் இல்லை என்பது துணிபு. ஆதலாற்றான் நம் மூதறிஞர் தங்கருமங்களுக்குரிய தேசமிதுவேயெனத் துணிந்து கைப்பற்றினர். ஆகையால் கன்மத்தாற் சித்தியைப்பெற விரும்பும் எவர்க்கும் இத்தேசமே உரியது திண்ணம். இத்தேசத்தை இதற்கெனவே கருணைவள்ளலாகிய கடவுள் படைத்தாரெனினும் ஒவ்வும். இதற்கு ஏறக்குறையச் சமமாய் அமெரிக்காதேசமிருப்பினும் யோகிகளுக்கு அவசியம்வேண்டிய காடு மலைகள் இவ்வளவு சுகமாயமையாதுபற்றி அதை விடுத்தோம்.

மற்றதுவரும்.

[illegible]

[illegible]

விசேஷ விஞ்ஞாபனம்.

வானவர் மானவர் மகிழ்ந்தருண் முத்தி
தானினி தடையத் தாண்டவஞ் செய்யுந்
தேனினை யமிழ்தைத் திரிகா ணங்களால்
வணங்கிப் போற்றி மகிமை பொருந்திய
பெரியோர்களுக்குச் செய்யும்
விஞ்ஞாபனம்.

பண்டைக்காலந்தொடங்கிப் புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்திலே வழங்கிவரும் பாஷைகள் சம்ஸ்கிருதமும் தமிழுமே யென்பது யாருமறிந்த விஷயமாம். இவ்விருபாஷைக்கு முதலாசிரியர் சிவபெருமானே. இப்பாஷைகளிலே கடவுளாலும் அவரருள்வழிப்பட்ட தொல்லாசிரியர்களாலு மருளிச்செய்யப்பட்ட உயர்ந்தநூல்களெண்ணிறந்தனவுள்ளன. பாடப்பியாசஞ் செய்விப்பாரின்மையானும் பெரிதும் போற்றுவாரின்மையானும் இறந்தன பல. "முற்காலத்துப்போதகாசிரியர் - மொழிகுவர் மறைபாரருமையா நூல்களை - யிக்காலத்தாரொன்னினைக்கென் றேவிசையார்தாமுமிசையார்" என்னுமாப்தவாக்கியமு மிதற்குச்சான்றாம். இருப்பவைகளிலும் காலிகிதவழுப்பட்டுக்கிடப்பனவல்ல. (வடநூல்களு மிந்த ஸ்திதியடைந்தனவோவென்பது அந்நூற்பயிற்சி நனியின்மையாற்றோன்றவேயில்லை.) இங்கே அடியேனெடுத்துக்கொண்டது தமிழேயாம். மூரணினவைகளைப் பரிசோதிக்கப்புகுந்த வித்துவசனர்படும் அவஸ்தை மிகப்பெரிது. அவைகளை இங்ஙனங்கூறின் மிகையாய் முடிந்துவிடும். முன்னைக்காலத்திலே பாண்டியராசர்களாலும், மகிமைபொருந்திய சங்கப்புலவர்களாலும், கல்வி விருத்தி நனிசெய்தருளப்பட்டமையும், பின்னர்ப் பரசமயகோளரியும் சிவானுபூதிச் செல்வர்களுமாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்முதலிய சமயகுரவர்களாலே சமயவிருத்தி நனிசெய்தருளப்பட்டமையும், முறையே திருவிளையாடற்புராணமும் பெரியபுராணமும் நன்கு கூறுகின்றன. இக்காலத்தில், ஆதீன மடாதிபதிகளாலேயே கல்வி விருத்தியும் சமயவிருத்தியுஞ் செய்தருளப்பட்டது. இங்கே இக்காலத்திலென்றது, சந்தான குரவர் காலத்தையுஞ்சேர்த்து இற்றைக்கு 700-வருடத்தின் முன்றொடங்கியதென்று கொள்க. தம்மையடைந்தவர்களுக்குக் கல்வி கற்பிப்பதும், அவருட் சத்திநிபாதமடையப்பெற்றாரை ஞானசாரியராக அபிஷேகஞ்செய்து வைப்பதும், புலவராய்த் தம்பால் வந்தோர்க்குச் சிறப்புச்செய்வதும் ஆகிய ஆதீனபரிபாலனமில்லாதொழியின் தமிழ் மிகவுங்குறைந்துபோய்விடும். சரஸ்வதியாலயமாய்க் கல்விக்களஞ்சியமாக முதன் முதற்றமிழ்நாட்டில் மடமேற்படுத்திய மகான்மா திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துப் பிரதம பரமாசாரியராய் எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயதேசிகரே. அடியேன் செய்யுமிவ்விஞ்ஞாபனத்தை இக்கால மடாதிபதிகளும் மற்றையோருந் திருவுள்ளத்தில் வைத்துக் கல்வி விருத்தியுஞ் சமயவிருத்தியுஞ் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

தானம்: சொர்னதானம், கோதானம், பூதானம், அன்னதானம், வித்தியாதானம் எனப்பஃறிறப்படுமென்பதூஉம், முன்னின்ற வெல்லாவற்றினும் அன்னதானமே விசிட்டமுடைத்தென்பதூஉம், அதனினும், "தானமெவ் வகையினு முயர்ந்த

வித்தியாதானமே சிறந்தது" என்பதூஉம் உண்மைநூற்கருத்து. அன்றியும், யாகங்களைந்து உள்ளன. அவைகள் கன்மயாகம், தபோயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகமென்பன. இவ்வைந்தியாகத்துள்ளும், கருமயாகமுதலிய முன்னைய நான்கியாகங்களை யநுட்டித்தவர் கடவுளுடைய வுலகத்தையடைந்து, அங்குள்ள திவ்விய போகங்களை யநுபவித்து மீளவுஞ் சனனத்தையடைவர். ஞானயாகத்தை யனுட்டித்தவர் பிறந்திறவாப் பெருவாழ்வாகிய சாயுச்சியத்தை யடைவர். ஆதலினால், ஞானயாகத்திற்சிறந்தது பிறிதொன்றமில்லையென்பதூஉம் உண்மைநூற்கருத்து. இத்தானங்கடாம், யாகங்கடாம், கல்வியறிவு சமயவறிவு தலைப்படாவழி யெவர்களாலும் செய்துகொள்ளற்பாலனவல்ல. ஆகலால் வித்தியாதானமே தானம்; வீடுபேற்றையும் பயத்தலால். அதுமட்டோ! செயற்பாலதெது, செயற்பாலதல்லாததெதுவென நனியுணர்ந்து வரலாற்றுமுறைமையின் மற்றைய தருமத்தைத்தான் பிறிதொன்றைத்தானடத்துமாகலான். கல்லாமலிங்ஙனம் விஷயங்களிற்றலைப்பட்டக்கால் வருமிழுக்கென்னையெனின், குனறுமுட்டிய குரீஇப்போல இடர்ப்படுதலும், "பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாய், பேதை வினைமேற் கொளின்" என்றவாறுய் முடிதலும், நரகத்துக்கும் ஆளாகுதலுமென்பது. ஓரோவழி சில புண்ணியசீலர் திரவியசகாயங்கொண்டுதான் தமிழ்க்கல்வி விருத்திசெய்ப்படினும், அங்கு மாணவகர்களை யெழுப்பத்தக்க "மாணவகேயம்" (Scholarship) இன்மையானும், அதிபதிகள் தம்முளொற்றுமையின்மையானும் அவ்வித்தியாசாலைகளிற் பாடங்கேட்ட சமர்த்தரான மாணவகர்க்கு அவ்வவர் கல்வித்திறமைக்கேற்பப் பெயருஞ் சின்னமுங் [illegible] பெரியோர் தலையிடாமையானும், இக்கல்வியிற் கண்ட [illegible] வென்பதே சாதாரண வழக்கமாயிற்று. அற்றேல், அரசாட்சியாருடைய வித்தியாசாலைகளிலே மாணவகரையேவிக் கல்விகற்பித்தாலென்னையோவெனின, அங்ஙனங் கற்றுத்தேறினவர்கள் யாண்டுங் காணப்படாமையானும், திராவிட அங்கிலேய பண்டிதராகிய சி. வை. தாமோதரப்பிள்ளையவர்கள் தாம் பிரகடனஞ்செய்த வீரசோழியப்பதிப்புரையிலே 22-ம், 23-ம் பக்கங்களில் அபிப்பிராயங்கூறியிருக்கின்றமையானும், அதிலொரு வசனம் "இலக்கியவாராய்ச்சி யில்லாதார்க்குச் சிற்றிலக்கணங்களைக் கற்பித்தலால [illegible] வா வந்தானெனக்கண்டு கா கந்தானென்றும் சா செத்தா [illegible] ந்தானென்றுங் கூறுவார்போலத் தமி [illegible] படுத்துகின்றனர் என்பதாதலானும் [illegible] வைகளால், பெயருஞ் சின்னமுங்கொடு [illegible] ல்வகைகளையுடையோர், இக்கண்ணிய தரு [illegible] சித்தங்கொள்ளாவிடின், இது விருத்தியாவ [illegible] தனைப்பற்றிப் பலவருஷங்களுக்குமுன்னே ஸ்ரீ [illegible] முகநாவலரவர்கள் "தமிழ்ப்புலமை" யென்னும் விஷயத்திலும், "தமிழ்ப்புத்தகங்க" ளென்னும் விஷயத்திலும் எழுதிய திவ்விய வசனங்கள் பின்னே முறையே காட்டப்படுகின்றன.

அவை, "தமிழ் கற்றவர்களை நடுவுநிலைமையின் வழுவாது பரீக்ஷைசெய்து அதில் வல்லவர்களென நன்குமதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்குஞ் சபையாரிக்காலத்தி லில்லாமையால் தமிழ்க்கல்வியில் வல்லவர்களும் வல்லவரல்லாதவர்களும் ஒப்பமதிக்கப்படுகிறார்கள். அதனால் நமது தேசத்தாருக்குத் தமிழ்க்கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதாயினுமிலவாயின. பண்டுதொட்டுக் கல்வியிற் சிறப்புற்று விளங்கும் மகிமைபொருந்திய மடாதிபதிகள் பெருங்கருணைகூர்ந்து காலந்தோறும் தமிழ் கற்றவர்களுள் தங்கள் சந்நிதானத்துக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டவர்களைப் பரீக்ஷைசெய்து வல்லவர்களென நன்குமதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமுங் கொடுத்தருளுவார்களாயின் எம்மொழியினுமினிய நமது தமிழ்மொழி மிகவளர்ந்தோங்குமே" என்பதும் "கல்விப்பொருளோடு செல்வப்பொருளும் ஒருங்குடைய மகிமைபொருந்திய மடாதிபதிகளும் பிரபுக்களும் நமது தமிழ்நாட்டிலும் தமிழ்ப்பாஷையினும் அபிமானமுடையர்களாகித் தங்கள் தங்களாலியன்றஉதவிசெய்து இம்முயற்சிகளை நிறைவேற்றுவார்களாயின் நமது நாட்டிலே எம்மொழியினுமினிய நமது தமிழ்மொழிவளர்ந்தோங்குமே" என்பதுமாம்.

ஆதலால், இக்காலத்திருக்கின்ற மகிமைபொருந்திய மடாதிபதிகளும், வித்வாம்சர்களும், பிரபுக்களும் பெருங்கருணைகூர்ந்து நமது தமிழ்நாட்டிலும் தமிழ்ப்பாஷையிலும் மிகவபிமானமுடையர்களாகி, மேற்செய்யப்பட்ட விஞ்ஞாபனத்திற்குத் திருச்செவிசாத்திக் காலந்தோறுந் தமிழ்கற்று வல்லவர்களாய் விளங்குகிற மாணவகர்களுக்குப் பெயருஞ் சின்னமுங் கொடுக்கச் சித்தங்கொள்ளவும், (இரண்டொரு காப்பியத்தையும் நன்னூலையும் வாசித்துவிட்டுத் தமது இயற்பெயரின் முன்பின் வித்துவான் புலவர்முதலிய சிறப்புப்பெயரையுந் தாமே தமக்குச் சூட்டிக்கொண்டு திரிவோர்க்கு மிது நன்மை பயக்குமே.) இத்தருமம் எவ்வேதுவானுஞ் சிறிதுமிடையூறடையாதியாண்டும் நடைபெறவும், ஆரியர்கள் தம்மாட்டுள்ள குறைகளை நிவிர்த்திசெய்யத்தோற்றிய ஆப்தராற் புகழப்படுகின்ற" பிரமவித்தியா" வென்னு மிப்பத்திரிகையைப் பிரசரிக்கின்ற மகிமை பொருந்திய ஸ்ரீபத்திராதிபரவர்கள் அங்கங்கு தாம் செய்யுமுபந்நியாசங்களாலுமிப்பத்திரிகையாலுங்காலந்தோறுமிதை நடைபெறச்செய்ய ஏவும்படிக்கும், பரங்கருணைத் தடங்கடலாகிய [illegible]சப்பெருமானது திவ்விய பாதாரவிந்தங்களை அகோராத்திரம் வணங்கிப் பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்,
நடேசதாசன்.

கொஞ்சநாளைக்குமுன் சிதம்பரந்தாலுக்கா மன்னார்குடியைச் சேர்ந்த வயலூருக்கருகிலிருக்கும் ஒரு கிராமத்தில் ஒருவனுடைய மனைவியுடன் அவன் ஷட்டகன் நெடுநாளாகச் சம்மந்தப்பட்டுக்கொண்டு வருவதாக அறிந்து ஒருநாளிரவில் ஷட்டகனைக் கொல்லவேண்டுமென்று அம்மிக்கல்லை எடுத்துக்கொண்டு வந்தபொழுது ஷட்டகனும், ஷட்டகனுடையமனைவியும் ஒரே படுக்கையில் நித்திரைசெய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது யாதுகாரணத்தாலோ புருஷனுடைய வேஷ்டி மனைவியின் பேரிலும்மனைவியினுடைபுடவை புருடன்பேரிலும் இருந்தது. கொல்லவந்தவன் அதனைத் தெரிந்துகொள்ளாமல் ஷெ ஸ்திரீயின் முகத்தில் கல்லைப்போடவே "தானொன்றுநினைக்கத்தெய்வமொன்றுநினைத்தது" என்றபடி அவள் இறந்துவிட்டாள்.

௨

[illegible]

௨

சுபமஸ்து.

பிரசித்தம்.

சூத்சம்மிதாப் பிரகடனம்.

ஸ்காந்தமஹாபுராணத்துள்ள ஆறு சம்மிதைகளுள் ஒன்ருய் யாவற்றினும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைதசித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புகட்டுவதாயுள்ளது இச்சூதசம்மிதை யென்பது அறிஞர்கள் யாவரும் அறிந்தவிஷயமாம். நம் சைவசமயத்துள் எவ்விஷயங்களை அறிய விரும்பினும் இச்சூதசம்மிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடுத்து விளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகள் மேன்மைதாங்கிய மஹாபாஷ்யம் வகுத்தாரெனின், மற்றிதன்பெருமை எளிதில் பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரிந்ததோருரையும் ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளால் இயற்றப்பட்டது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னாட்டவர்க்கு மிக உபயோகந் தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புத்தகம் 1-ரூபா 5-க்கு விற்கப்பட்டுவருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம் தென்னாட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் [illegible]களின்படி நாம் அதனைக் கிரந்த எழுத்தில் அச்சி[illegible]க்கும் உபயோகமாகும்பொருட்டு மிகச் சொற்பவிலையாகிய 2-ரூபாவுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கின்றோம்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து இதுமுதல் மூன்று மாசத்துக்குள் இதன் கிரயமாகிய ரூபா இரண்டையும் முன்பணமாக அனுப்புதல்வேண்டும். அப்படி முன்பணம் அனுப்புவோர்க்கு மாசம் 1-க்கு 8-பாரங்கொண்ட சஞ்சிகையாக 16-மாசம் வரையிலாவது அல்லது 16-மாசத்தின் பின்னர் உயர்ந்த கலிகோ பயிண்டு செய்து ஒரே தடவையில புத்தகமாகவாவது [illegible] 10-க்கு 1-ம், 25-க்கு 3-ம், 50-க்கு [illegible] இனாமாகக் கொடுக்கப்படும்.

பணம் அனுப்புவோர் இதனடியிற்கண்[illegible]ப்பி ரசீது பெற்றுக்கொள்வதோடு, தமக்[illegible] சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது ப[illegible] புஸ்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தம[illegible] கடிதமூலமாகத் தெரிவித்தலும்வேண்டும். புரட்டாசியா[illegible] க்குள் அனுப்பப்படும் கையொப்பங்களேயன்றி அதன்மேல் வரும் கையொப்பங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

விரோதிஹூ வைகாசியீ 29௳ } இங்ஙனம், கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள். ப்ரமவித்தியாப்ரொஸதலைவர்.

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

பத்திரகிரயம்.

1-வருஷம்	2	12	0
6-மீ	1	8	0
3-மீ	0	14	0
1-காபி	0	2	6
இலங்கைக்கு	3	8	0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திர கிரயத்தை மணியார்டராகவாவதல்லது ரூபா 1-க்கு அணா 1-சேர்த்துத்தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரொஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible] ‖ [illegible] ‖

௪-ம்புத்தகம்] சிதம்பரம்:— ௧௮௮௯ ௵ டிசம்பர் ௴ ௰௨ [இலக்கம்-௯

பத்ரிகாவிஷய:

[illegible]

பத்ரிகாவிதானங்கள்.

௧ பத்திரிகை. வேண்டுவோர் ப்ரம்வித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

௨. கடிதமுதலியவைகளும் மேற்படி மானேஜருக்கே அனுப்புதல்வேணடும்.

௩. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும்கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் நல்லமைகொண்டு சுத்தரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெரு.

௪. கையொப்பக்காரர்கள் ஊர் பெயர் முதலியவற்றை நன்ருக எழுதியனுப்புதல்வேண்டும். வேறு ஊர்களுக்குப் போககேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல்வேண்டும்.

௫. இன்னும் இதைப்பற்றி விவரம அறியவேண்டுவோர் அரையணு லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித் தெரிந்துகொள்ளலாம்.

௬ அனுப்பப்பட்ட கடிதங்களெவ்வித அசௌகரியத்தினலாவாது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாப்சு செய்யப்படா.

௭. ☞ முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப்பத்திரிகை யனுப்பப்படமாட்டாது. ☜

R. நாராயணசாமிஐயர்.
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ,
சிதம்பரம்